



# ஆனந்த பாஸ்கர்

PRGI No: TNMUL/25/A1387

உதயத்தில் உங்களுடன் காலை நாளிதழ்

ANANDA BHASKAR

www.anandabhaskar.com






சென்னை மலர்: 01 இதழ்: 158 03.12.2025 புதன்கிழமை

Chennai Volume: 01 Issue: 158 Wednesday pages 4 Rs.5/-


## இன்றைய நாள்

புதன்கிழமை
(3-12-2025)
விசுவாவசு ஆண்டு, கார்த்திகை-17

பிறை: வளர்பிறை

திதி
திரயோதசி காலை 10.13 வரை
பிறகு சதுர்த்தசி.

நட்சத்திரம்:
பரணி மாலை 4.47 வரை
பிறகு கார்த்திகை

யோகம்
சித்த/அமிர்தயோகம்

ராகுகாலம்
நண்பகல் 12.00–1.30 மணி.

எமகண்டம்
காலை 7.30 – 9.00 மணி.

சூலம் –வடக்கு.

நல்ல நேரம் :
காலை 6–7 மணி.
மாலை 4–5 மணி

| | |
|---|---|
| மேஷம் | வரவு |
| ரிஷபம் | நன்மை |
| மிதுனம் | சாந்தம் |
| கடகம் | நலம் |
| சிம்மம் | லாபம் |
| கன்னி | வெற்றி |
| துலாம் | அமைதி |
| விருச்சிகம் | பொறுமை |
| தனுசு | தேர்ச்சி |
| மகரம் | ஊக்கம் |
| கும்பம் | விவேகம் |
| மீனம் | மாற்றம் |

# SIR-ஐ எதிர்த்து அமளி: நாடாளுமன்ற இரு அவைகளும் ஒத்திவைப்பு




**புதுடெல்லி,டிச,3:**

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்க்கட்சி எம்பிக்கள் நாடாளுமன்றத்துக்கு வெளியேயும், உள்ளேயும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குளிர்கால கூட்டத்தொடரின் இரண்டாம் நாளான இன்று நாடாளுமன்றம் கூடுவதற்கு முன்பாக நாடாளுமன்றத்தின் மகர் துவார் பகுதியில் இண்டியா கூட்டணி எம்பிக்கள், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்துக்கு (எஸ்ஐஆர்) எதிர்ப்பு தெரிவித்து கோஷங்களை எழுப்பினர்.

பிஹாரைத் தொடர்ந்து 12 மாநிலங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் எஸ்ஐஆர் பணிகளை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் வாக்குத் திருட்டில் ஈடுபடக்கூடாது என்றும் அவர்கள் வலியுறுத்தினர். இதை வலியுறுத்தும் வகையில் கைகளில் பதாகைகளை ஏந்தியவாறு அவர்கள் கோஷங்களை எழுப்பினர். இண்டியா கூட்டணி எம்பிக்களின் இந்த ஆர்ப்பாட்டத்தில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, மூத்த தலைவர் சோனியா காந்தி, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

போராட்டம் குறித்து செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் எம்பி மாணிக்கம் தாகூர், "எஸ்ஐஆர் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தப்பட வேண்டும். வாக்களிக்கும் உரிமை ஆபத்தில் இருப்பதால், இந்த முக்கிய பிரச்சினையில் இருந்து அரசு விலகி ஓடக்கூடாது. பிஹாரில் 62 லட்சம் வாக்காளர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டனர். தற்போது 12 மாநிலங்களில் எஸ்ஐஆர் நடத்தப்படுகிறது.

எஸ்ஐஆர் பணிகளை மேற்கொள்வதால் எழுந்துள்ள கூடுதல் அழுத்தம் காரணமாக ஏராளமான பிஎல்ஓக்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இந்தியாவின் ஜனநாயகத்தைப் பாதுகாக்க இது குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தப்பட வேண்டும்." என வலியுறுத்தினார்.

காங்கிரஸ் மூத்த தலைவர்களில் ஒருவரும் எம்பியுமான திக்விஜய் சிங், "நாங்கள் எப்போதும் எஸ்ஐஆர்-க்கு ஆதரவாகவே இருக்கிறோம். எஸ்ஐஆர் ஏற்கெனவே நடந்துள்ளது. அப்போது, 2 முதல் 4 மாதங்களுக்கு அது நடக்கும். அதோடு, அது ஒவ்வொரு குடிமகனின் வாக்குகளையும் பதிவு செய்வதற்கான ஒரு செயல்முறையாக இருந்தது. வாக்காளர்கள் எந்த படிவங்களையும் நிரப்பவில்லை.

பிஎல்ஓ வந்து கேட்பார், நாங்கள் தகவல் கொடுப்போம். எங்கள் வாக்கு சேர்க்கப்படும். ஆனால், இந்த எஸ்ஐஆர் என்பது படிவத்தை நிரப்பி, இந்திய குடிமகன் என்பதற்கான ஆதாரத்தை இணைக்கக் கோருகிறது. இது உண்மையில் எஸ்ஐஆர் அல்ல. இது சிஏஏ. எனவேதான் நாங்கள் இதை எதிர்க்கிறோம்." என தெரிவித்தார். நாடாளுமன்ற மக்களவை காலை 11 மணிக்குக் கூடியதும், மக்களவையின் மையப் பகுதிக்கு வந்த எதிர்க்கட்சி எம்பிக்கள், எஸ்ஐஆர் குறித்து விவாதிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி அமளியில் ஈடுபட்டனர். தொடர் அமளி காரணமாக அவையை பகல் 12 மணி வரை அவைத் தலைவர் ஓம் பிர்லா ஒத்திவைத்தார். மீண்டும் அவை கூடிய போதும் அமளி நீடித்ததால் தற்போது மதியம் 2 மணி வரை அவை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மாநிலங்களவை காலை 11 மணிக்கு சி.பி. ராதாகிருஷ்ணன் தலைமையில் கூடியது. அப்போது, விதி எண் 267ன் கீழ் 21 நோட்டீஸ்கள் பெறப்பட்டுள்ளதாகவும் எனினும், அவை நிராகரிக்கப்பட்டதாகவும் சி.பி. ராதாகிருஷ்ணன் அறிவித்தார். இந்த அறிவிப்பை அடுத்து எதிர்க்கட்சி எம்பிக்கள் எஸ்ஐஆர் குறித்து விவாதம் நடத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி கோஷங்களை எழுப்பினர். இதனால், மாநிலங்களவை மதியம் 2 மணி வரை ஒத்திவைக்கப்படுவதாக சி.பி. ராதாகிருஷ்ணன் அறிவித்தார்.

## த.வெ.க. நெரிசல் வழக்கை சிபிஐக்கு மாற்றியதை ரத்து செய்யக்கோரி சுப்ரீம் கோர்ட்டில் தமிழக அரசு மனுதாக்கல்

**சென்னை,டிச,3:**

கரூரில் த.வெ.க கட்சியின் பிரசார கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலில் 41பேர் பலியானார்கள். இவ்விவகாரம் தொடர்பாக த.வெ.க சுப்ரீம் கோர்ட்டில் தொடர்ந்த வழக்கில் தமிழ்நாடு அரசு பதில் மனுதாக்கல் செய்துள்ளது.

கரூர் சம்பவம் தொடர்பாக தமிழ்நாடு காவல்துறையின் விசாரணை சரியான திசையில்தான் சென்று கொண்டிருந்தது. எந்த வகையிலும் பாரபட்சமின்றி விசாரணை என்பது நடத்தப்பட்டு வந்தது. சென்னை ஐகோர்ட்டுதான் சிறப்பு விசாரணை குழுவை அமைத்தது. அதுவும் மூத்த ஐ.பி.எஸ் அதிகாரி தலைமையில் விசாரணை குழுவை அமைத்தது.

எனவே நீதியை நிலைநாட்டும் வகையில் நடுநிலையான ஒரு உத்தரவை கோர்ட்டு இந்த விவகாரத்தில் பிறப்பிக்க வேண்டும். அந்த வகையில் சி.பி.ஐ விசாரணை ரத்து செய்துவிட்டு தமிழ்நாடு காவல்துறையின் சிறப்பு புலனாய்வு குழு விசாரணையை தொடர அனுமதிக்க வேண்டும். ஒரு நபர் ஆணையத்தின் விசாரணையை தொடர்வதற்கு அனுமதிக்க வேண்டும்.

## டிட்வா புயலால் 4 பேர் உயிரிழப்பு; ஹெக்டேருக்கு ரூ.20,000 இழப்பீடு



**சென்னை,டிச,3:**

தமிழகத்தில் டிட்வா புயல் காரணமாக பெய்த கனமழையால் இதுவரை 4 பேர் உயிரிழந்துள்ளனர் என தமிழக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார். மேலும், நீரில் மூழ்கி சேதமடைந்த விளை நிலத்துக்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ.20,000 இழப்பீடு வழங்கப்படும் என்று அமைச்சர் அறிவித்தார்.

இது குறித்து அவர் சென்னையில் செய்தியாளர்களிடம் பேசியபோது, "கனமழையால் தமிழகம் முழுவதும் 85,521.76 ஹெக்டேர் நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளது. நீரில் மூழ்கி சேதமடைந்த விளை நிலத்துக்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ.20,000 இழப்பீடு வழங்கப்படும். பயிர் பாதிப்பு கணக்கெடுப்பு பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. கணக்கெடுப்புக்கு பின்னர் உரிய நிவாரணம் வழங்கப்படும்.

நிவாரணத்தை உடனடியாக வழங்க முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

டிட்வா புயல் காரணமாக பெய்த கனமழையால் இதுவரை 4 பேர் உயிரிழந்துள்ளனர். 582 கால்நடைகள் இறந்துள்ளன. 1,601 குடிசை வீடுகள் சேதமடைந்துள்ளன. மயிலாடுதுறை மற்றும் விழுப்புரத்தில் இருவர் மின்சாரம் தாக்கி இறந்துள்ளனர். தூத்துக்குடி மற்றும் தஞ்சாவூரில் சுவர் இடிந்து விழுந்து இருவர் இறந்துள்ளனர்.

அரசு மற்றும் தனியார் வானிலை ஆய்வு மைய கணிப்புக்குள் இந்த மழை வரவில்லை. சென்னையில் தோராயமாக 15 செ.மீ மழை பெய்துள்ளது.

சென்னையில் சாலைகளில் விழுந்த 27 மரங்கள் அகற்றப்பட்டுள்ளன. தூர்வாரும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## 3 மாவட்டங்களில் இன்று மிக கனமழைக்கு வாய்ப்பு



**சென்னை,டிச.3:**

கடற்கரை நோக்கி வரும் காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் இன்று இரவு சென்னை - புதுச்சேரி இடையே கரையைக் கடக்க வாய்ப்பு உள்ளதாக தெரிவித்துள்ளது.

இந்நிலையில் சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, செங்கல்பட்டு மாவட்டங்களுக்கு மிக கனமழைக்கான ஆரஞ்ச் அலர்ட் விடுக்கப்பட்டுள்ளது. வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர் மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளது.

கோவை, நீலகிரி, ஈரோடு மாவட்டங்களில் இன்று மிக கனமழை (ஆரஞ்ச் அலர்ட்) பெய்யும். சேலம், நாமக்கல், திருப்பூர், திண்டுக்கல், தேனி, தென்காசி, நெல்லை, கன்னியாகுமரி மாவட்டங்களில் இன்று கனமழை பெய்யும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## பிஹார் சட்டப்பேரவை சபாநாயகராக பாஜக மூத்த தலைவர் பிரேம் குமார் ஒருமனதாக தேர்வு

**பாட்னா,டிச.3:**

பிஹார் சட்டப்பேரவைக்கு நடைபெற்ற பொதுத் தேர்தலில் மொத்தமுள்ள 243 தொகுதிகளில் 202 தொகுதிகளை ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணி கைப்பற்றியது. இதில், பாஜக 89, ஐக்கிய ஜனதா தளம் 85 இடங்களைக் கைப்பற்றின. தேர்தல் வெற்றியை அடுத்து, கடந்த நவ. 20ம் தேதி நிதிஷ் குமார் முதல்வராக பதவியேற்றார். அவருடன் 2 துணை முதல்வர்கள் உட்பட 26 அமைச்சர்கள் பதவியேற்றனர். பாஜகவில் இருந்து 14 பேர், ஐக்கிய ஜனதா தளத்தில் இருந்து 8 பேர், ராஷ்டிரிய லோக் சக்தி (ராம்விலாஸ்) கட்சியில் இருந்து 2 பேர், இந்துஸ்தானி அவாம் மோர்ச்சா,



ராஷ்டிரிய லோக் மோர்ச்சாவில் இருந்து தலா ஒருவர் அமைச்சர்களாகினர்.

இதையடுத்து, பிஹார் சட்டப்பேரவைக் கூட்டம் கடந்த திங்கள் கிழமை முதன்முறையாகக் கூடியது. தற்காலிக சபாநாயகராக தேர்வு செய்யப்பட்ட நரேந்திர நாராயண் யாதவ் முன்பாக, தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் முறைப்படி சட்டப்பேரவை உறுப்பினர்களாக பொறுப்பேற்றனர்.. இந்நிலையில், பிஹார் சட்டப்பேரவையின் சபாநாயகர் தேர்தல் இன்று நடைபெற்றது. சபாநாயகர் பதவிக்கு பிரேம் குமார் மட்டுமே பரிந்துரைக்கப்பட்ட வேட்பாளராக உள்ளார் என தற்காலிக சபாநாயகர் சட்டப்பேரவையில் அறிவித்தார். பின்னர், குரல் வாக்கெடுப்பின் மூலம் பிரேம் குமார் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார். தற்காலிக சபாநாயகர் நரேந்திர நாராயண் யாதவ் இதை அவையில் அறிவித்தார். கயா டவுன் தொகுதியில் 8-வது முறையாக வெற்றி பெற்ற பிரேம் குமாரை, முதல்வர் நிதிஷ் குமாரும், எதிர்க்கட்சித் தலைவர் தேஜஸ்வி யாதவும் இணைந்து சபாநாயகர் இருக்கைக்கு அழைத்துச் சென்று அமர வைத்தனர்.




## மின்வேலியில் சிக்கி 3 பேர் பலி - விவசாயி கைது

**வேலூர்,டிச.3:**

வேலூர் மாவட்டம், ஒடுகத்தூர் அருகே உள்ள ராமநாயினி குப்பத்தை சேர்ந்தவர் ஜானகிராமன் (வயது55), விவசாயி. இவரது மனைவி மல்லிகா(50). இவரது மகன்கள் விகாஷ் (25), லோகேஷ் (23), ஜீவா (22).

லோகேஷ் பெங்களூருவில் உள்ள தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறார். விடுமுறையில் சொந்த ஊருக்கு வந்து இருந்தார். விகாஷ், ஜீவா ஆகியோர் சொந்த ஊரிலேயே ஜானகிராமனுக்கு உதவியாக நர்சரி கார்டன் வைத்து விற்பனை செய்து வந்தனர். இந்த நிலையில் நேற்றிரவு ஜானகிராமன் மற்றும் அவரது மகன்கள் விவசாய நிலத்திற்கு சென்றனர். அப்போது வனவிலங்குகளுக்கு அமைக்கப்பட்டு இருந்த மின்வேலியில் சிக்கி ஜானகிராமன் அலறி துடித்தார். இதனை பார்த்த 3 மகன்களும் தந்தையை காப்பாற்ற முயற்சி செய்தனர். அப்போது 3 மகன்களும் மின்வேலியில் சிக்கி கொண்டனர்.

சிறிது நேரத்தில் ஜானகிராமன், விகாஷ், ஜீவா ஆகிய 3 பேர் மீதும் மின்சாரம் பாய்ந்து உடல் கருகி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக இறந்தார். லோகேஷ் படுகாயமடைந்தார்.

இதுகுறித்து வேப்பங்குப்பம் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த போலீசார் மின்வாரிய அலுவலகத்திற்கு தகவல் தெரிவித்து மின்சாரத்தை துண்டித்தனர். பின்னர், 3 பேரின் உடல்களை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அடுக்கம்பாறை அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் படுகாயமடைந்த லோகேசை சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். இதுகுறித்து வழக்குப்பதிவு நிலத்தில் சட்டத்திற்கு புறம்பாக மின்வேலி அமைத்த பக்கத்து நிலத்தை சேர்ந்த சங்கர் (52), விவசாயி என்பவரை தேடி வந்தனர். இந்த நிலையில் நேற்று காலை குப்பம்பட்டு கிராமத்தில் இருந்த அவரை போலீசார் கைது செய்து தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



## கார்த்திகை சோமவாரத்தை முன்னிட்டு சிறப்பு அலங்காரத்தில் நம் புவனேஸ்வரர்




**விழுப்புரம், டிச.03:**
விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி கீழ மாட வீதியில் அமைந்திருக்கும் புவனேஸ்வரி உடனுறை புவனேஸ்வரர் ஆலயத்தில் கார்த்திகை 3-வது சோமவாரத்தை முன்னிட்டு சிறப்பு அபிஷேகம், அலங்காரங்கள், எலுமிச்சம் பழம் மாலைகளுடன், தாமரை மாலையுடன், வில்வம் மாலையுடன், வண்ணமலர் மாலைகளால் அலங்கரிக்கப்பட்டு, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், வேத மந்திரங்கள் ஒலிக்க மஹா தீபாராதனையும் நடைபெற்றது. அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.**

சாலை விபத்தில் பலியான குடும்பத்தினர்க்கு

## தமிழரசி எம்எல்ஏ ஆறுதல் தெரிவித்து முதல்வர் நிவாரண நிதிரூ 3 லட்சம் வழங்கினார்



**சிவகங்கை ,டிச.3:**
சிவகங்கை மாவட்டம் காரைக்குடி திருப்பத்தூர் பிள்ளையார்பட்டி சாலையில் பேரூந்து விபத்தில் இறந்த இளையான்குடி சானாரேந்தல் கிராமத்தைச் சேர்ந்த கல்பனாவின் குடும்பத்திற்கு தமிழக அரசின் சார்பில் 3லட்சம் நிதியை மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் ஆ.தமிழரசி வழங்கி துக்கம் விசாரித்து இறந்த வரின் குடும்பத்தினர்க்கு ஆறுதல் தெரிவித்தார்.

உடன் வட்டாட்சியர் பொறுப்பு கிருஷ்ணகுமார், இளையான்குடி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சுப. மதியரசன், வருவாய் ஆய்வாளர் சகாயமேரி, கிராம நிர்வாக அலுவலர் சுகன்யா, மாணிக்கம், ஆரோக்கியசாமி, கண்ணன், ஜான் ஆகியோர் உடன் இருந்தனர்.

## ஸ்ரீரங்கம் கோவிலில் நடிகர் கார்த்தி சாமி தரிசனம்!




**சென்னை, டிச.03:**
'மெய்யழகன்' படத்தைத் தொடர்ந்து, நலன் குமாரசாமி இயக்கத்தில் 'வா வாத்தியார்' என்ற படத்தில் கார்த்தி நடித்து முடித்துள்ளார். இப்படத்தில் கீர்த்தி ஷெட்டி கதாநாயகியாக நடித்துள்ளார். சத்யராஜ், ராஜ்கிரண் உள்பட பலரும் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

சந்தோஷ் நாராயணன் இசையமைத்துள்ள இந்தப் படம் வருகிற 12ஆம் தேதி திரைக்கு வருகிறது

இந்நிலையில், திருச்சியில் உள்ள ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோயிலில் நடிகர் கார்த்தி சாமி தரிசனம் செய்தார்.

## மலேசியா முருகன் கோவிலில் சாமி தரிசனம் செய்தார் அஜித்குமார்




**மலேசியா,டிச.03:**
தமிழ் சினிமாவின் முன்னணி நடிகரான அஜித்குமார் தற்போது வெளிநாடுகளில் நடக்கும் கார் பந்தயங்களில் கலந்துகொண்டு வருகிறார்.

அவ்வகையில் மலேசியா வில் நடைபெறவுள்ள 24H சீரிஸ் கார் பந்தயத்தில் கலந்துகொள்ள அஜித்குமார் மலேசியா சென்றுள்ளார்.

இந்நிலையில், 24H சீரிஸ் கார் பந்தயத்திற்கு முன்பாக, பத்து மலை முருகன் கோயிலில் அஜித்குமார் சாமி தரிசனம் செய்தார். இதே கோவிலில் அவர் நடித்த "பில்லா" படத்தின் பாடல் காட்சிகள் படமாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது

## மானாமதுரை யோக விநாயகர் கோவில் மகா கும்பாபிஷேகம்

**மானாமதுரை, டிச 3:**
சிவகங்கை மாவட்டம் மானாமதுரை பூமி வரத யோக விநாயகர் கோவில் கும்பாபிஷேகம்நடை பெற்றது.

மானாமதுரை சிவகங்கை ரோட்டில் காந்தி சிலை முன்புறமுள்ள பிரசித்தி பெற்ற பூமி வரத யோக விநாயகர் கோவிலில் சில மாதங் களாக கும்பாபிஷேகத் திற்காக திருப்பணிகள் நடைபெற்றது

அதைதொடர்ந்து திங்கட் கிழமை காலை 9:35 மணியிலிருந்து 10:29 மணிக்குள் கும்பாபி ஷேகம் அதனைதொடர்ந்து அபிஷேக, ஆராதனை, நடைபெற்றது ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபாடு செய்தனர் மாரியம்மன் கோவில் தெருவில் உள்ள தனியார் மஹாலில் சிறப்பு அன்னதானம் நடைபெற்றது .

யாகசாலை பூஜை ஏற்பாடுகளை முருகன் கொடுமலூர் கோவில் சிவாச்சாரியார் நவநீதன் தலைமையில் கணபதி ஹோமத்துடன் யாகசாலை பூஜை ஆரம்ப மாகி விக்னேஷ்வர் பூஜை, வாஸ்து சாந்தி, கும்ப அலங்காரம், யாக சாலை பிரவேசம், அஷ்ட பந்தன




மருந்து சாத்துதல் உள்ளிட்ட பல்வேறு பூஜைகள் நடைபெற்றது. விழா ஏற்பாடுகளை பூஜாரி ராஜேந்திரன், ஸ்தபதி பாண்டி மற்றும் விழாக் குழுவினர் செய்து இருந்தனர்.

## மானாமதுரை அப்பன் பெருமாள் கோவிலில் திருக்கல்யாணம் நிகழ்ச்சி



**மானாமதுரை, டிச.3:**
சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வைகை ஆற்று கரையில் உள்ள பிரசித்தி அப்பன் பெருமாள் கோவிலில் 4ம் ஆண்டு வருடாபிஷேக விழாவை முன்னிட்டு சிறப்பு சுதர்சன ஹோமம் அதைத் தொடர்ந்து சுவாமிக்கு சிறப்பு திருமஞ்சனம் பூஜைகள் நடத்தப்பட்டது.

கோவில் வளாகத்தில் புனித நீர் அடங்கிய கடங் களை வைத்து ஹோமம் வளர்க்கப்பட்ட பின்னர் புனித நீரை கொண்டு சுவாமிக்கு அபிஷேகம் செய்யப்பட்டது. மாலை 6:00 மணிக்கு தேவியர்ருடன் கூடிய ஸ்ரீஅப்பன் பெருமாளுக்கு திருக்கல்யாணம் நிகழ்ச்சி நடைபெற்றது. கோவில் பட்டர்கள் ஆடி பாடி திருக்கல்யாண நிகழ்ச்சி நடத்தினர்


இதில் மதுரை அழகர் கோவிலில் இருந்து ஸ்ரீ சுந்தர ராஜ பெருமாள் அணிந்த பூமாலை



கொண்டு வரப்பட்டு அப்பன் பெருமாளுக்கு சாத்தப்பட்டு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது.

ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபாடு செய்தனர்.

## கார்த்திகை தீபத் திருவிழாவை முன்னிட்டு 9-ஆம் நாள் காலை உற்சவம்


திருவண்ணாமலை அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயிலில் திருக்கார்த்திகை தீபத் திருவிழாவை முன்னிட்டு ஒன்பதாம் நாள் காலை விநாயகர் மூஷிக வாகனத்தில் சந்திரசேகர் புருஷா முனி வாகனத்திலும் மாட வீதி உலா நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் மாடவீதி உலாவில் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தார்கள். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.**

## தீபக் கொப்பரையை மலை உச்சிக்கு எடுத்து செல்லப்பட்டது



**திருவண்ணாமலை, டிச.03:**
திருவண்ணாமலை அண்ணாமலையார் திருக்கோயிலில் தீபத் திருவிழாவின் முக்கியமான நிகழ்வு மகா தீபம் ஏற்றுவதற்காக தீபக் பறை நேற்று சிறப்பு பூஜை செய்யப்பட்டு பக்தர்கள் தீபக் கொப்பரையை மலை உச்சிக்கு எடுத்து செல்லப்பட்டார்கள். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## இன்று பொங்கல் திருவிழா



ஈரோடு - மொடக்குறிச்சி - குளூர் - ஆண்டக்கொத்தாம் பாளையம் ஸ்ரீமகாமாரியம்மன் கோவிலில் நேற்று 02.12.2025 செவ்வாய்க்கிழமை காவேரி சென்று தீர்த்தம் எடுத்து வருதல் நிகழ்வு நடை பெற்றது.. சுமார் 500 நபர்கள் கலந்து கொள்வார்கள். மேலே உள்ளது திங்கட்கிழமை 01.12.2025 அம்மன் அலங்காரம். அனைவருக்கும் அம்மன் அருள் தருவார். இன்று 03.12.2025 புதன்கிழமை பொங்கல் திருவிழா. வாழ்த்துக்கள் வாழ்க வளமுடன்

## 'தினத்தந்தி' நிர்வாகஆசிரியர்டி.இ.ஆர்.சுகுமாருக்கு 'கலைஞர்எழுதுகோல்' விருது

### மு.க.ஸ்டாலின் வழங்கினார்

**சென்னை, டிச.03:**
தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறி இருப்பதாவது:-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இன்று தலைமைச் செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் 2024-ம் ஆண்டிற்கான கலைஞர் எழுதுகோல் விருதினை 50 ஆண்டுகளாக இதழியல் துறையில் பணியாற்றி நிறைந்த அனுபவம் பெற்றுள்ள தினத்தந்தி நாளிதழின் நிர்வாக ஆசிரியர் டி.இ.ஆர்.சுகுமாருக்கு வழங்கிச் சிறப்பித்தார்.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் 2021-22-ம் ஆண்டிற்கான செய்தி மக்கள் தொடர்புத்துறையின் மானியக் கோரிக்கையின் போது, இதழியல் துறையில் சமூக மேம்பாட்டிற்காகவும், விளிம்பு நிலை மக்களின் மேம்பாட்டிற்காகவும் பங்காற்றி வரும் சிறந்த இதழியலாளர் ஒருவருக்கு ஆண்டுதோறும்



'கலைஞர் எழுதுகோல் விருது' மற்றும் ரூ.5 லட்சம் பரிசுத் தொகையுடன் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பினைச் செயல்படுத்தும் வகையில், கடந்த 2021-ம் ஆண்டிற்கான 'கலைஞர் எழுதுகோல் விருது' மூத்த பத்திரிக்கையாளர் ஐ.சண்முகநாதனுக்கும், 2022-ஆம் ஆண்டிற்கான 'கலைஞர் எழுதுகோல் விருது' மூத்த பத்திரிக்கையாளர் வி.என். சாமிக்கும் 2023-ம் ஆண்டிற்கான 'கலைஞர் எழுதுகோல் விருது' நக்கீரன் ஆசிரியர் கோபாலுக்கும், அதே ஆண்டில் முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழாவையொட்டி, சிறப்பினமாக மகளிர் ஒருவருக்கும் 'கலைஞர் எழுதுகோல் விருது' வழங்கப்படும் என்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து சுகிதா சாரங்கராஜிக்கும் வழங்கப்பட்டது.

அவற்றின் தொடர்ச்சியாக, 50 ஆண்டுகளாக இதழியல் துறையில் பணியாற்றி நிறைந்த அனுபவம் பெற்றுள்ள தினத்தந்தி நாளிதழின் நிர்வாக ஆசிரியர் டி.இ.ஆர்.சுகுமாருக்கு 2024-ம் ஆண்டிற்கான கலைஞர் எழுதுகோல் விருதிற்கு தமிழ்நாடு அரசால் தேர்வு செய்யப்பட்டார்.

டி.இ.ஆர்.சுகுமார் முன்னாள் பிரதமர் வாஜ்பாய், தமிழ்நாட்டின் முதலமைச்சர்களாகத் திகழ்ந்த முத்தமிழறிஞர் கலைஞர், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். உள்ளிட்ட எண்ணற்ற அரசியல் தலைவர்கள் மற்றும் உயர் அதிகாரிகளைச் சந்தித்து நேர்முகமாகப் பேட்டிகண்டு சுவையான செய்திகளை மக்களுக்கு வழங்கியவர் ஆவார். தினத்தந்தி நாளிதழில் நாள்தோறும் அவர் எழுதி வரும் "தலையங்கம்", வாரம் ஒருமுறை "பேனா மன்னன்" என்ற பெயரில் வாசகர்களின் கேள்விகளுக்கு அவர் அளித்து வரும் பதில்களும் மக்களிடம் பெரிதும் வரவேற்பு பெற்று உள்ளவை என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் டி.இ.ஆர்.சுகுமார், உலக அளவில் சீனா, சிங்கப்பூர், ஹாங்காங், துபாய், மலேசியா, இலங்கை ஆகிய நாடுகளில் நடைபெற்ற பல்வேறு சிறப்பான நிகழ்வுகளின்போது, அந்தந்த நாடுகளுக்குச் சென்று, செய்திகளைத் திரட்டி, தினத்தந்தி வாயிலாகத் தமிழ்நாட்டு மக்களுக்கு வழங்கியுள்ள சிறப்பான இதழியல் துறை அனுபவங்களையும் கொண்டுள்ளார். அத்துடன் முத்தமிழறிஞர் கலைஞருடன் 40 ஆண்டுகளுக்கு மேல் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர்.

இதழியல் துறையில் 50 ஆண்டுகளாக அர்ப்பணிப்புடனும் நேர்த்தியுடனும் நேர்மையுடனும் நெஞ்சுறுதியோடும் தினத்தந்தி நாளிதழின் நிர்வாக ஆசிரியராகத் தொடர்ந்து பணியாற்றிவரும் டி.இ.ஆர். சுகுமாருக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இன்றையதினம் 2024-ம் ஆண்டுக்கான கலைஞர் எழுதுகோல் விருது, பாராட்டுச் சான்றிதழ் மற்றும் 5 லட்சம் ரூபாய் பொற்கிழி ஆகியவற்றை வழங்கிச் சிறப்பித்தார்.

இந்த நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத்துறை கூடுதல் இயக்குநர் (செய்தி) செல்வராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# திருச்சி: பராமரிப்பு பணிக்கு வந்த வந்தே பாரத் ரெயிலை பூஜை செய்து வரவேற்ற அதிகாரிகள்



**திருச்சி, டிச.3:** திருச்சி பொன்மலை ரெயில்வே பணிமனையில் ரெயில் பெட்டிகளை பழுது நீக்கும் பணி மற்றும் ஊட்டி மலை ரெயில் என்ஜின்கள் தயாரிக்கும் மற்றும் பழுது நீக்கும் பணிகள் உள்ளிட்ட முக்கிய பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் இந்த பணிமனைக்கு முதன்முறையாக 16 பெட்டிகள் கொண்ட வந்தே பாரத் ரெயில் பராமரிப்பு பணிக்காக வந்துள்ளது.

கடந்த 2022-ம் ஆண்டு முதல் சென்னையில் இருந்து திருவனந்தபுரத்திற்கு இயக்கப்பட்டு வரும் இந்த ரெயில், தற்போது பராமரிப்பு பணிக்காக இந்த பணிமனைக்கு வந்துள்ளது. இதனை தொடர்ந்து பொன்மலை ரெயில்வே பணிமனையின் அதிகாரிகள், தொழிலாளர்கள் பூஜை போட்டு அந்த ரெயிலை வரவேற்றனர். 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை வந்தே பாரத் ரெயிலில் பராமரிப்பு பணி செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது.

### குரூப்-4 தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கான

# சான்றிதழ் சரிபார்ப்பு, கலந்தாய்வு 8-ந்தேதி தொடங்குகிறது

**சென்னை, டிச.3:** தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் (டி.என்.பி.எஸ்.சி.) செயலாளர் கோபால சுந்தரராஜ் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு எழுதிய (தொகுதி-4 பணிகள்) தேர்வர்கள் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் தரவரிசை விவரங்கள் தேர்வாணைய இணையதளத்தில் கடந்த அக்டோபர் மாதம் 22-ந் தேதி அன்று வெளியிடப்பட்டது. இதில், அறிவிக்கப்பட்டுள்ள இளநிலை உதவியாளர், கிராம நிர்வாக அலுவலர் உள்ளிட்ட பிற பதவிகளுக்கான காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கு சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு வருகிற 8 மற்றும் 18-ந் தேதி வரையில் (சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை நீங்கலாக) சென்னை பிராட்வே பஸ் நிலையம் அருகே உள்ள டி.என்.பி.எஸ்.சி. அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

இதற்கு அழைக்கப்பட்ட தேர்வர்களின் பட்டியல் டி.என்.பி.எஸ்.சி. இணையதளத்தில் (www.tnpsc.gov.in) வெளியிடப்பட்டுள்ளது. குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் மூலம் மட்டும் அழைப்பு விடுக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# வைகை அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பால் தடுப்பணையில் வெள்ளம்

**ஆண்டிபட்டி, டிச.3:** தேனி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்து வந்த நிலையில் முக்கிய அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்த வண்ணம் இருந்தது. சற்று மழை ஓய்ந்த நிலையில் டிட்வா புயல் காரணமாக கடந்த 3 நாட்களாக விட்டு விட்டு மழை பெய்தது. குறிப்பாக மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளான வெள்ளிமலை, வருசநாடு, அய்யனார்கோவில், டானா தோட்டம் போன்ற பகுதிகளில் பெய்த மழை காரணமாக வைகை அணைக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக கண்டமனூர் வைகை ஆற்றில் நீர்வரத்து அதிகரித்து காணப்படுகிறது. எனவே கண்டமனூர் தடுப்பணையில் தண்ணீர் ஆர்ப்பரித்து வெள்ளம் போல் பெருக்கெடுத்து செல்கிறது. எனவே பொதுமக்கள் யாரும் தடுப்பணையில் குளிக்கவோ, துணி துவைக்கவோ இறங்க வேண்டாம் என்றும், கால்நடைகளை அழைத்துச் செல்ல வேண்டாம் எனவும் பொதுப்பணித்துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

நீர் வரத்து அதிகரிப்பால் 71 அடி உயரமுள்ள வைகை அணையின் நீர்மட்டம் இன்று காலை நிலவரப்படி 63.29 அடியாக உள்ளது. அணைக்கு வினாடிக்கு 1740 கன அடி நீர் வருகிறது. அணையில் இருந்து குடிநீர் மற்றும் பாசன தேவைகளுக்காக 1319 கன அடி நீர் திறக்கப்படுகிறது. நீர் இருப்பு 4262 மி.கன அடியாக உள்ளது.




# ஆரணி வேதபுரீஸ்வரர் கோவில் கும்பாபிஷேகம்: எம்.பி., எம்.எல்.ஏ. பங்கேற்பு




**திருவண்ணாமலை, டிச.3:** ஆரணி கொசப்பாளையம் வேதபுரீஸ்வரர் கோவில் தெருவில் அமைந்துள்ள பாலகுஜாம்பிகா சமேத வேதபுரீஸ்வரர் கோவிலில் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடந்தது.

கும்பாபிஷேகத்திற்காக கோவில் அருகில் நவக்கினி யாக குண்டம் அமைக்கப்பட்டு புனிதநீர் நிரப்பப்பட்ட கலசங்கள் வைத்து சரவணன் சிவாச்சாரியார் தலைமையில் வேத மந்திரங்கள் முழங்க 4 கால சிறப்பு யாக பூஜைகளை சிவாச்சாரியார்கள் நடத்தினர். இந்த பூஜைகள் நேற்று காலையில் நிறைவடைந்த நிலையில், பூஜிக்கப்பட்ட புனிதநீர் கலசங்களை மங்கள வாத்தியங்கள், சிவகண வாத்தியங்களுடன் கோவில் வலம் வந்து முகப்பு கோபுரம், கருவறை கோபுரம், அம்பாள் கோபுரம், விநாயகர், வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணியர் உள்ளிட்ட கோபுரங்களுக்கு புனிதநீர் ஊற்றி மகா கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. தொடர்ந்து சாமிக்கும் பரிவார சாமிகளுக்கும் புனிதநீர் ஊற்றி மகா அபிஷேகம் நடத்தப்பட்டது.

கும்பாபிஷேக விழாவில் எம்.எஸ்.தரணிவேந்தன் எம்.பி., சேவூர் எஸ்.ராமச்சந்திரன் எம்.எல்.ஏ., நகரமன்ற தலைவர் ஏ.சி.மணி, நகரமன்ற துணைத்தலைவர் பாரி பி.பாபு உள்பட திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர். பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. மாலையில் சாமி திருக்கல்யாணம் உற்சவமும், இரவில் சாமி திருவீதி உலாவும் நடந்தது.

# தொடர் கனமழையால் மெரினாவில் தேங்கிய மழை நீர்.. கடற்கரைக்கு செல்ல தடை



**சென்னை, டிச.3:** டிட்வா புயல், ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுடைந்தாலும், சென்னை உள்ளிட்ட வட கடலோர மாவட்டங்களில் நேற்று முதல் கனமழையை கொடுத்து வருகிறது. இது காற்றழுத்த தாழ்வு மண்டலமாக சென்னை - மாமல்லபுரம் இடையே கரையை கடக்கும் என்றும் இதனால் வட மாவட்டங்களில் இன்றும் கனமழை தொடரும் என்றும் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

நேற்று முதல் பெய்து வரும் மழையால் சென்னையில் தாழ்வான பகுதிகளில் மழைநீர் சூழ்ந்துள்ளது. இதனால் வாகன ஓட்டிகள் அவதியடைந்து வரும் நிலையில், மழையால் பொதுமக்களும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. மழை இன்று இரவு வரை நீடிக்கும் என எச்சரிக்கை விடப்பட்டு உள்ளது.

இந்த நிலையில், கனமழை காரணமாக மெரினா கடற்கரை மணல் பகுதிகளில் மழைநீர் குளம் போல தேங்கியுள்ளது. இதனால் கடற்கரையின் சில பகுதிகள் கடல் போல காட்சியளிக்கின்றன. எனவே பாதுகாப்பு காரணங்களுக்காக பொதுமக்கள் மெரினா கடற்கரைக்கு செல்ல தடை விதிக்கப்பட்டு உள்ளது. மேலும், மெரினா கடற்கரைக்கு செல்லும் வழியில் தடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளது.

# தண்டலை நடுநிலைப் பள்ளியில் இடைப்பருவ தேர்வு வெற்றியாளர்களுக்கு பரிசுகளும் பாராட்டும்



புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடி ஒன்றியம் தண்டலை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் இரண்டாம் பருவத் தேர்வின் இடைப்பருவ தேர்வு நடைபெற்றது இந்த தேர்வில் ஒன்று முதல் 8 வகுப்பு வரை முதலிடம் பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளும் பாராட்டும் வழங்கப்பட்டன பள்ளியின் பொறுப்பு தலைமை ஆசிரியர் மு.சீனிவாசன் பரிசுகள் வழங்கி மாணவர்களை பாராட்டினார் ஆசிரியர்கள் தேன்மொழி ,மாலதி, சரண்ராஜ் மற்றும் பிரதீபா ஆகியோர் மாணவர்களுக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

# ஒசூர் பாவலர் கருமலைத்தமிழாழனின் கவிதை நூல் வெளியீடு



சென்னை கௌரா பதிப்பகம் தன்னடைய 25 ஆம் ஆண்டு வெள்ளி விழாவை முன்னிட்டு நடத்திய கவிதைப் போட்டியில் பாவலர் கருமலைத்தமிழாழன் எழுதிய "அப்பா எனும் அமுதச் சொல்" கவிதை பரிசு பெற்றது. அந்தக் கவிதை நூலாக வெளியிடப்பட்டது. கௌரா பதிப்பக உரிமையாளர் இராசசேகர் ஏற்பாட்டில் சென்னை தியாகராயர் நகர் சர்.பிட்டி. தியாகராயர் அரங்கத்தில் 29-11-2025 சனிக்கிழமை நடைபெற்ற விழாவில் தி.மு.கழகத் துணைப் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஆ.இராசா பரிசு பெற்ற பாவலர் கருமலைத்தமிழாழனின் "அப்பா எனும் அமுதச் சொல்" நூலை வெளியிட்டுப் பரிசுத் தொகை வழங்கி வாழ்த்திப்பேசினார்.



# தினம் ஒரு குறள்

**அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை**
**இகழ்வார்ப் பொறுத்தல் தலை.** - குறள் 151

త్రవ్వువారినైనఁ ధరమోయు నట్టులే
తెగడుచున్న నోర్వ తగునటండ్రు - కురల్ 151

**क्षमा क्षमा कर ज्यों धरे, जो खोदेगा फोड़ ।**
**निन्दक को करना क्षमा, है सुधर्म बेजोड़ ॥** - कुराल 151

Akazhvaaraith Thaangum Nilampolath Thammai
Ikazhvaarp Poruththal Thalai - Kural 151

### திருவண்ணாமலை கார்த்திகை தீபத்திருவிழா

# மகாதீப கொப்பரை மலை உச்சிக்கு கொண்டு செல்லப்பட்டது





**திருவண்ணாமலை, டிச.3:** திருவண்ணாமலை மகாதீப தரிசன விழா நாளை நடைபெற உள்ளது. அங்கு லட்சக்கணக்கான பக்தர்கள் குவிந்துள்ளனர். நாளை அதிகாலை 4 மணிக்கு அருணாசலேஸ்வரர் கோவிலில் பரணி தீபம் ஏற்றப்படும்.

மாலை 6 மணிக்கு ஆண்டுக்கு ஒரு முறை மட்டுமே காட்சி தரும் அர்த்தநாரீஸ்வரர் அருணாசலேஸ்வரர் சன்னதி முன்பு ஆனந்த நடனத்துடன் எழுந்தருள 2 ஆயிரத்து 668 அடி உயரமுள்ள அண்ணாமலை உச்சியில் மகா தீபம் ஏற்றப்படும்.

நாளை முதல் 11 நாட்களுக்கு அண்ணாமலை உச்சியில் சிவபெருமான் தீப்பிழம்பாய் காட்சி தருவார். திருவண்ணாமலை நகரில் இருந்து சுமார் 15 கிலோ மீட்டர் தூரம் வரை மகாதீபம் தெரியும். அண்ணாமலை உச்சியில் மகா தீபம் ஏற்றப்படும் மகா தீப கொப்பரைக்கு அதிகாலை அண்ணாமலையார் கோவிலில் சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டது.

அதனை தொடர்ந்து 2 ஆயிரத்து 668 அடி உயரம் உள்ள அண்ணாமலை உச்சிக்கு மகாதீப கொப்பரை கொண்டு செல்லப்பட்டது. மகா தீபம் ஏற்ற 4 ஆயிரத்து 500 கிலோ நெய் பயன்படுத்தப்படும்.

மலையே சிவனாக வணங்கப்படும் அண்ணா மலையை வலம் வருவதற்காகவும், மகா தீபத்தை தரிசிக்கவும் பல்வேறு மாவட்டங்கள் மற்றும் மாநிலங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் திருவண்ணாமலையில் குவிந்து வருகின்றனர்.

தீப தரிசனம் காண திருவண்ணாமலை நகருக்கு வரும் 9 பிரதான சாலைகள் வழியாகவும் பக்தர்கள் வந்த வண்ணம் உள்ளனர்.

### வாக்காளர் பட்டியல் தீவிர திருத்த பணி

# 99 சதவீதம் வாக்காளர்களுக்கு கணக்கீட்டு படிவங்கள்

## தேர்தல் கமிஷன் தகவல்



**சென்னை, டிச.3:** தமிழ்நாட்டில் கடந்த நவம்பர் 4-ந்தேதி முதல் எஸ்.ஐ.ஆர். என்ற வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் தொடங்கின. இந்தப் பணிகளில் தமிழகம் முழுவதும் 68 ஆயிரத்து 470 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். முதல் நாளில் இருந்தே வீடு வீடாகச் சென்று வாக்காளர்களுக்கு கணக்கீட்டு படிவங்களை கொடுத்து வருகின்றனர்.

தமிழகத்தில் கடந்த அக்டோபர் 27-ந்தேதி நிலவரப்படி மொத்தம் 6 கோடியே 41 லட்சத்து 14 ஆயிரத்து 587 வாக்காளர்கள் உள்ளனர். அவர்களுக்கு வழங்குவதற்காக அதே அளவில் கணக்கீட்டு படிவங்கள் அச்சடிக்கப்பட்டுள்ளன. அவற்றில் 6 கோடியே 35 லட்சத்து 99 ஆயிரத்து 698 படிவங்கள், அதாவது 99.20 சதவீதம் வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டுவிட்டதாக இந்திய தேர்தல் கமிஷன் நேற்று தெரிவித்தது. அவற்றில் 5 கோடியே 86 லட்சத்து 57 ஆயிரத்து 184 படிவங்கள் அதாவது 91.49 சதவீதம் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

புதுச்சேரியில் மொத்தம் 10 லட்சத்து 21 ஆயிரத்து 578 வாக்காளர்கள் உள்ளனர். அங்கு 962 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் எஸ்.ஐ.ஆர். பணியாற்றி வருகின்றனர். அங்கு 10 லட்சத்து 16 ஆயிரத்து 423 கணக்கீட்டு படிவங்கள், அதாவது 99.50 சதவீத படிவங்கள், வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டுவிட்டதாக தேர்தல் கமிஷன் தெரிவித்துள்ளது. அவற்றில் 9 லட்சத்து 61 ஆயிரத்து 500 படிவங்கள் அதாவது 94.12 சதவீதம் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

# கவிதை அரங்கம்!





நீ கனவு காண்பது உனக்கு
கிடைத்தே தீரும்! அந்தக்
கனவு என்னவாக இருக்க
வேண்டும் என்பதை முடிவு
செய்!

தோல்வியை கண்டு
தளர்ந்து போனவர்கள்
அங்கேயே முடங்கி
போகிறார்கள்!
தோல்வியில் இருந்து
கற்றுக்கொண்டவர்கள்
முன்னோக்கி
போகிறார்கள்!


எதிலும்.... தோல்வியை
நேசித்தால் வெற்றியை
சுவைக்கலாம்...

தோல்வியை ஒரு முறை
எதிர்த்து பார்!!!
உன்னை தோற்கடிக்க
யாரும் இல்லை என்ற
தைரியம் வரும்!!!

உன் வெற்றிக்கான முதல்
படியே தோல்வி தான்
எனவே அதை கண்டு
பயந்து ஓடாதே!

சரியாக செய்ய வேண்டும்
என தள்ளி போடுவதை
விட தவறுகளை திருத்தி
நேற்று இருந்ததை விட
சிறிதளவு முன்னேறுவது
எவ்வளவோ மேல்.

## வாழ்க்கை தத்துவம்



ஆயிரம் பேரின் கண்கள் உன்னை நோக்கினாலும் இரு கண்கள் மட்டுமே என்றும் உன்னை அன்பாக நோக்கும் உன்னைப் பெற்றவள், நீ அவதரிக்க காரணமாய் இருந்தவர்.

கோபம் வருகின்ற பொழுது வார்த்தையின் அளவுகள் அதிகரிக்கின்றன. அன்பானவர்களைக்(அன்பானவரைக்) கூட எதிர்த்து விடுகின்றது..

கெட்டவனாக இருந்து கொண்டு நல்ல பெயர் எடுப்பதைவிட.. நல்லவனாய் இருந்து கெட்ட பெயர் எடுப்பது எவ்வளவோ மேல்..

கடற்கரையில் இருக்கும் கப்பலை விட கடலினுள் இருக்கும் படகின் பெறுமதி அதிகம். அது போல் மனிதா நீ உருவாக்கும் பொருள் உபயோகாமானால் சிறப்பு.

# மாற்றமே மருந்து



" ரகுராஜன் விமலா தம்பதியர்க்கு இரண்டு மகன் ஒரு மகள் நடுத்தர குடும்பம் தான் . தன் பெரிய மகன் விஷாலுக்கு மணம் முடித்தார் . மருமகள் கமலி நல்ல பெண் .

எதிர்பாராத விதமாக விபத்தில் விஷால் உயிர் இழக்க ரகுராஜன் குடும்பம் நிலை குலைந்து போனது .

ஒரு வழியாக இரண்டாவது மகன் ரவிக்கு திருமணம் முடித்தார் ரகுராஜன் . மருமகள் ராணியும் நல்ல பெண் .

ஓராண்டிற்கு பிறகு தன் மகள் வர்ஷாவிற்கு திருமணம் முடித்தார் ரகுராஜன் . மூத்த மருமகள் கமலி தாய் வீட்டுக்கு செல்லாமல் புகுந்த வீட்டிலேயே இருந்து விட்டாள் .

வர்ஷாவிற்கு வளையல் காப்பு சீமந்தம் நடக்க ரகுராஜன் விமலா தம்பதியர் ராணியை சடங்கு செய்ய அழைத்தார் . கமலி அங்கு வராமல் ஒதுங்கி இருந்தாள். விதவை என்கிற ஏக்கம் வேறு .

சடங்கு முடிந்த பிறகு வர்ஷா கமலி காலில் விழுந்து ஆசி பெற்றாள் . வர்ஷாவை தன் தங்கையாக பார்த்து ஆனந்தம் கொண்டாள் கமலி .

பிறகு தன் தந்தை தாயான ரகுராஜன் விமலாவிடம் சென்று உங்கள் மகள் வர்ஷாவிற்கு இப்படி நடந்து இருந்தால் அமைதி காப்பீர்களா...?".

அண்ணியும் உணர்ச்சியுள்ள சிறு பெண் தானே ...? அண்ணன் விஷால் இறந்து போய் இரண்டு ஆண்டுகள் ஆகிறது இன்னும் அண்ணி தன் வீட்டிற்கு போக வில்லை உங்களுக்கு இது புரியாதா...?" புரிந்தும் செயல் பட மனம் இல்லையா....?" என்று வெடித்து சிதறினாள் .

ரகுராஜன் விமலா தம்பதியருக்கு கமலி தன் மூத்த மருமகள் அல்ல மூத்த மகள் என்பது தெளிவாக புரிந்தது ....."

குழம்பிய மனம் தெளிவு பெற்றது உடன் ஒரு மாதத்தில் வீட்டோடு மாப்பிள்ளையாக ராகுலை கொண்டு வந்தார்கள் ரகுராஜன் விமலா தம்பதியர் .

வர்ஷாவை பார்த்த கமலி அவள் காலில் விழ முடியாமல் ஆனந்த கண்ணீரில் நனைத்தாள் அவளை அனைத்த படியே . மனம் இருந்தால் மார்க்கம் உண்டு அதுவும் சரிதானே..."

**ஆர்.சீதாராமன்**
- சீர்காழி.

# உழைப்பே உயர்வு!




ஏழையிடம் இரண்டு பசு மாடுகள் இருந்தன, அவற்றில் கிடைத்த பாலை விற்ற வருமானத்தில் வாழ்ந்து வந்தான். குடும்பம் நடத்த போதுமானதாக இல்லை. மனைவி, குழந்தைகளுடன் வறுமையில் வாடினான். ஏழ்மையை போக்க மாற்று வழி தெரியாமல் தவித்தான்.

ஒருமுறை, அவன் வசித்த ஊருக்கு வந்திருந்தார் ஒரு ஞானி. அவரிடம் மிகுந்த சக்தி இருப்பதாக பேசிக்கொண்டனர். அவரை சந்தித்து ஆலோசனை பெற சென்றான் ஏழை. மிகுந்த அமைதியுடன், 'இன்று முதல் உன் வாழ்க்கை உயரும்...' என்று ஆசி கூறினார் ஞானி.

அன்று மாடுகள் அதிக பால் கொடுத்தன; அது தொடர்ந்ததால் வருமானம் பெருகியது. இரண்டு நாலாகி, நான்கு எட்டாயின. வீட்டில், 30 மாடுகள் சேர்ந்தன. கூரை வீடு, பங்களா ஆனது. திரும்பிய இடமெல்லாம் செல்வம் செழித்தது. ஓய்வெடுக்க நேரமில்லை. ஓடி ஓடி உழைத்துக்கொண்டிருந்தான் அந்த ஏழை.

ஆண்டுகள் ஓடின. ஞானி. மீண்டும் அந்த ஊருக்கு வந்தார் கடந்த பயணத்தின் போது ஆசி பெற்ற ஏழை, பெருஞ்செல்வந்தன் ஆகியிருந்ததை அறிந்து மகிழ்ச்சி அடைந்தார், தேடிவருவான் என்று எதிர்பார்த்தார். மூன்று நாட்கள் கடந்த பின்னும் வரவில்லை. நேராக அவன் வீட்டுக்கு சென்றார் ஞானி.

கனிவுடன் வரவேற்று அமர வைத்தாள் அவன் மனைவி. மாடுகளை குளிப்பாட்டிக் கொண்டு இருந்தான் கணவன். ஞானியின் வருகை குறித்து தெரிவித்தாள். வேலையை முடித்து வந்து விடுவதாக தகவல் அனுப்பினான், ஞானிக்கு கடும் கோபம் வந்தது. 'காசு, பணம் வந்ததும், பழசை எல்லாம் மறந்து விட்டாயா... இனி, உன்னிடம் இத்தனை மாடுகள் இருக்காது; பழையது போல் இரண்டே மாடுகள் தான் இருக்கும்... சபித்தபடி வெளியேறினார் ஞானி. பதறியடித்து ஓடி வந்தான்; செய்வதறியாது திகைத்தான். ஞானி கோபித்துக் கொள்வாரென்று அவன் எண்ணவே இல்லை. அவர் சென்ற திக்கில் தேடி ஓடினான்; எங்கும் தென்படவில்லை. சோர்ந்து திரும்பினான்; வீட்டில், இரண்டு மாடுகள் மட்டும் இருந்தன. தலையில் அடித்து அழுதபடி, அலட்சியத்தால் எல்லாம் போச்சு: பழையபடி வறுமை வாட்டுமே... என புலம்பினான்.

தனித்தவனிடம், இரண்டு மாட்டையும், இப்பவே வித்துடுங்க..." என்றாள் மனைவி, அவனுக்கு குழப்பம் ஏற்பட்டது. 'மாட்டை விற்றால் வருமானத்துக்கு என்ன வழி.. எதுவும் புரியாமல் கேட்டான். மாடுகளை விற்க மறுபடியும் வலியுறுத்தினாள் மனைவி.

'சரி... நடப்பது நடக்கட்டும்..." மாடுகளுடன் சந்தைக்கு புறப்பட்டான். நன்றாக வளர்ந்திருந்ததால் மாடுகளை உடனே நல்ல விலையில் விற்க முடிந்தது. கண்ணீருடன் வீடு திரும்பியவனை, புன்னகையுடன் வரவேற்றாள் மனைவி. ஒன்றும் புரியாமல் நின்றவனிடம், 'கொல்லைப் புறத்தில் போய் பாருங்க..." என்றாள்.

இரண்டு புதிய மாடுகள் அங்கு நின்றன. கேள்விக்குறியுடன் மனைவியை பார்த்தான். 'எப்பவும் இரண்டு மாடு தான் இருக்கும் என்பது தானே சாபம்... அப்ப அவற்றை வித்தாலும், அதே இடத்துக்கு இரண்டு புதிய மாடுகள் வந்துவிடும் அல்லவா... அவள் கூறியதும் விபரம் புரிந்தது. அவற்றை சிறப்பாக பராமரித்து விற்றான். அந்த வருமானத்தில் மகிழ்வுடன் வாழ்ந்தான். குழந்தைகளே... உழைப்பு எப்போதும் வாழ்க்கையை உயர்த்தும்.

# தினம் ஒரு சமையல்



## பூண்டு தொக்கு

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| தேவையான பொருட்கள்: | |
| பூண்டு | - 20 லிருந்து 25 |
| மிளகாய் பொடி | -2 TBSPS |
| கொத்தமல்லி பொடி | -1TBSP |
| கடுகு | -1 TSP |
| வெந்தையம் | -1 TSP |
| பெருங்காய பொடி | - 3 TSP |
| கறிவேப்பிலை | - தேவைக்கேற்ப |
| புளி-சிறிய எழும்பிச்சை அளவு | |
| உப்பு | -தேவைக்கேற்ப |
| நல்லஎண்ணெய் | -2 தேக்கரண்டியளவு |

செய்முறை:



முதலில் பூண்டை தோலுரித்து எடுத்து கொள்ளவும்.

புலியை தண்ணீரில் ஊறவைத்து ,கரைத்து எடுத்துக்கொள்ளவும்.

1 / 4 கடுகையையும் ,வெந்தையத்தையும் எண்ணெய் இல்லாமல் வறுத்து பொடி செய்தது கொள்ளவும்.

பின்னர் எண்ணெயை காயவைத்து அதில் கடுகயையும் ,வெந்தையத்தையும் சேர்த்து மற்றும் பெருங்காய பொடி,பூண்டையும் சேர்த்து வதக்கவும்.

நன்றாக வதங்கிய பிறகு அதில் மிளகாய்த்தூள்,கொத்தமல்லி பொடி ஆகியவற்றைசேர்த்து பிரட்டி நன்றாக வதக்கி பச்சைவாசனை போனவுடன் இறக்கவும்.

## சீந்தில் நன்மைகள்



சீந்தில் முழுத்தாவரம் கைப்புச் சுவையும், வெப்பத் தன்மையும் கொண்டவை. பேதி, வெள்ளை படுதல், ஆகியவை குணமாகும். கிழங்கு, மேகம், காய்ச்சல், கழிச்சல், மாந்தம், விஷக்கடிகள் ஆகியவற்றைக் குணமாக்கும்.

இலை, தண்டு உடல் பலத்தை அதிகரிக்கும். சிறுநீர் பெருக்கும். முறைக் காய்ச்சல் தீர்க்கும். அஜீரணம் குணமாகும்; வாதநோய்கள், கிரந்தி முதலியவை கட்டுப்படும்; காமம் பெருகும்.

பல்லாண்டு வாழும் ஏறு கொடி வகையைச் சார்ந்தது. கிளிப்பச்சை நிறமான இதய வடிவ இலைகள், 5-10 செ.மீ. வரை நீளமானவை, தெளிவான 7-9 நரம்புகளுடன் இருக்கும். தண்டு பச்சையானது, சாறு நிறைந்தது, தக்கையான தோலால் மூடப்பட்டிருக்கும்.

தண்டும், கிளைகளும் வெண்மையான சுரப்பிப் புள்ளிகளுடன் காணப்படும். கொடியிலிருந்து மெல்லிய விழுதுகள் தொங்கிக் கொண்டிருக்கும் பூக்கள், மஞ்சளானவை, கொத்தானவை. ஆண், பெண் பூக்கள் தனித்தனியானவை.

காய்கள் உருண்டையானவை, கொத்தானவை, பச்சையானவை. பழங்கள் சிவப்பானவை, பட்டாணி அளவில் காணப்படும். இந்தியாவின் வெப்பமண்டலப் பிரதேசம் முழுவதும் வளர்கின்றது. காடுகளிலும் வேலியோர மரங்களிலும் படர்ந்து காணப்படும்.

பழங்கால இலக்கிய நூல்களில் பொற்சீந்தில் கொடி என்கிற பெயரால் அழைக்கப்பட்டுள்ளது. அமிர்தவல்லி, சோமவல்லி, சாகாமூலி, சஞ்சீவி, ஆகாசவல்லி ஆகிய பெயர்களும் இதற்கு உண்டு. முழுத்தாவரமும் மருத்துவப் பயன் கொண்டது. இலை, தண்டுகள் அதிகமான மருத்துவப் பயன் கொண்டவை.

சாதாரண சளியுடன் வரும் காய்ச்சலுக்கு ஒரு அடி நீளமான சீந்தில் தண்டிலிருந்து, அதன் மேல் தோலை அகற்றி, இடித்து, ½ லிட்டர் நீரில் இட்டுக் கொதிக்க வைத்து, ஒரு டம்ளர் அளவாக இரசம் செய்யவும். ஒரு கோப்பை அளவு இந்த இரசத்தைப் பருக வேண்டும். இதேபோல் மூன்று நாட்களுக்கு, தினம் மூன்று வேளைகள் தொடர்ந்து செய்ய வேண்டும்.

நோயால் இளைத்த உடல் உறுதியடைய முதிர்ந்த கொடிகளை, தோல் நீக்கி, உலர்த்திப் பொடி செய்து காலை, மாலை வேளைகளில், ½ தேக்கரண்டி அளவு, ஒரு டம்ளர் பாலுடன் கலந்து சாப்பிட்டுவர வேண்டும்.


நாவறட்சி, தாகம் குணமாக மேல் தோல் நீக்கிய சீந்தில் தண்டு, நெற்பொரி, வகைக்கு 50 கிராம், நசுக்கி, ஒரு லிட்டர் நீரில் இட்டு, ¼ லிட்டராக சுண்டக்காய்ச்சி, வேளைக்கு 50 மி.லி. வீதம், 4 வேளைகள் குடிக்க வேண்டும்.

குறிப்பு:

ஈரல் வலுவடையும் உடலின் சக்தி அதிகரிக்கவும், தாய்ப்பாலின் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகப்படுத்தவும் இதே இரசத்தை 7 லிருந்து 21 நாட்கள் வரை தினம் இரு வேளைகள் 30 மி.லி. அளவு பருகி வரலாம்.

இதனை, ஒரு கிராம் அளவில் உள்ளுக்குச் சாப்பிட, வயிற்றுக் கடுப்பு, வயிற்றுப்போக்கை நீக்கும். கல்லீரல், மண்ணீரல் ஆகியவை சீந்தில் சர்க்கரை சாப்பிட உறுதியாகும். உடல் எடை, உறுதி அதிகமாகும். பிற மருந்துகளுடன் சீந்தில் சர்க்கரை சிறிதளவு சேர்த்துக் கொடுக்க பலவகையான நோய்களும் விரைவில் குணமாகும்.

# தொகுப்பாளினி மணிமேகலை வீட்டில் ஸ்பெஷல் பூஜை... வீடியோவுடன் இதோ



சன் மியூசிக் தொலைக்காட்சி மூலம் தமிழக மக்களின் கவனத்திற்கு வந்தவர் தான் மணிமேகலை.

அதில் தனக்கான அங்கீகாரம் பெற்றவர் விஜய் டிவி பக்கம் வந்து பெரிய அளவில் மக்களின் கவனத்தை பெற்றார்.

நிகழ்ச்சி தொகுத்து வழங்குவது, பங்குபெறுவது முக்கிய குக் வித் கோமாளி நிகழ்ச்சியில் கோமாளியாக மணிமேகலை செய்த அட்ராசிட்டியை சொல்லியா தெரிய வேண்டும்.

ஆனால் விஜய் டிவியில் ஏற்பட்ட சில பிரச்சனைகளால் அங்கிருந்து கிளம்பியவர் இப்போது ஜீ தமிழில் தனது பயணத்தை தொடங்கியுள்ளார்.

ஹுசைன் என்பவரை காதலித்து திருமணம் செய்துகொண்ட மணிமேகலை திருமணத்தில் மதம் பெரிய பிரச்சனையாக இருந்தது.

ஆனால் அதையெல்லாம் தூக்கிப்போட்டு கணவருடன் சந்தோஷமாக வாழ்ந்து வருகிறார்.

அண்மையில் மணிமேகலையின் கணவர் ஹுசைன் ஐயப்ப மாலை போட்டிருந்தார்.

முதன்முறையாக அவர் மாலை போட்டிருப்பதால் அவர்களது வீட்டில் கன்னி பூஜை செய்துள்ளனர். அந்த வீடியோவை தான் மணிமேகலை தனது இன்ஸ்டாவில் பகிர்ந்துள்ளார், ரசிகர்கள் மனதார வாழ்த்தி வருகிறார்கள்.






நடிகை அனுபமா பரமேஸ்வரன் கலர்ஃபுல் உடையில் அழகிய போஸ் கொடுத்த ஸ்டில்கள்.

லேட்டஸ்ட் போட்டோஷூட் புகைப்படங்கள் இதோ.

# மூளை கம்மியாக இருப்பதால்தான் என்னால்... ஓபனாக பேசிய சிவகார்த்திகேயன்



சிவகார்த்திகேயன், மேடைகளில் எப்படி பேசுவார், எவ்வளவு கலகலப்பாக பார்வையாளர்களை சிரிக்க வைப்பார் என்பது நமக்கே தெரியும்.

அவர் சமீபத்தில் ஒரு நிகழ்ச்சியில் தனது ரசிகர்கள் குறித்தும், அவர்கள் எப்படி இருக்க வேண்டும் என பேசியுள்ளார்.

சென்னை வடபழனியில் Fan-ly எனும் பிரத்யேக செயலியின் அறிமுக விழா நடைபெற்றது, அதில் சிவகார்த்திகேயன் கலந்துகொண்டார்.

அதில் பேசும்போது, மூளை கம்மியாக இருப்பதால் தான் நடிகராக இருக்க முடிகிறது. மூளை அதிகமாக இருந்தால் இயக்குனர்களை எல்லாம் தொல்லை செய்திருப்பேன். அது இல்லை என்பதாலேயே நடிகராக இருக்கிறேன் என்றார்.

மேலும் ரசிகர்களை பற்றி பேசும்போது, என்னை ஆராதிக்கும் ரசிகர்கள் எனக்கு வேண்டாம், அவர்கள் கடவுளையும் தாய் தந்தையையும் வழிபட்டால் போதும்.

என்னை ஒரு நண்பனாகவும், சகோதரராகவும் பார்க்கும் ரசிகர்கள் தான் எனக்கு வேண்டும், அதான் என் ஆசை. நானும் என் ரசிகர்களை குடும்பமாக தான் கருதுகிறேன் என கூறியுள்ளார்.

Published by R.S ROSHINE Printed by **R.S. ROSHINE** On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: **R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: anandabhaskarnews@gmail.com**